පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
**Department for Registration of Persons**

# කාර්ය සාධන වාර්තාව-2015
# செயல் மதிப்பீட்டு அறிக்கை-2015
# PERFORMANCE REPORT-2015



සී-45, කැප්පෙටිපොල පාර, කොළඹ 05.
சி-45, கெப்பெட்டிபொல மாவத்தை, கொழும்பு-05.
C-45, Keppetipola Road, Colombo 05.

# செயல் மதிப்பீட்டு அறிக்கை

# 2015

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| **1.** | அறிமுகம் | **1** |
| | நோக்கக் கூற்று | **1** |
| | பணிக் கூற்று | **1** |
| | நோக்கங்கள் | **1** |
| | பிரதான கடமை | 1 |
| | திணைக்களத்தின் பொறுப்பு | 1 |
| **2.** | அடையாள அட்டை வழங்கல் | 2-**4** |
| | சாதாரண சேவை | 2 |
| | ஒரு நாள் சேவை | 3 |
| | விண்ணப்பங்கையேற்றல் மற்றும் அடையாள அட்டை விநியோகம் | 4 |
| 3. | தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்தும் வேலைத் திட்டம். | 5-6 |
| **4.** | அடையாள அட்டை வழங்கல் பணிகளின் பொருட்டு கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பம் என்பவற்றை பயன்படுத்தல். | 7 |
| **5.** | நடமாடும் சேவை | 7 |
| **6.** | பயிற்சி வழங்கல் செயற்பாடுகள் | 7 |
| **7.** | ஊக்கக் கொடுப்பனவு வழங்கல் | 7 |
| **8** | சட்டம் தொடர்பான கடமைகள் | 7 |
| **9.** | பௌதிக வள முகாமைத்துவம் | 8 |
| **10.** | நிதி முன்னேற்றம் | 9 |
| **11.** | பணிக்குழுக்கள் தொடர்பான தகவல்கள் | 10-11 |
| 12. | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை கருத்திட்டம் | 12-21 |

# ஆட்பதிவுத் திணைக்களம்
# செயலாற்றுகை அறிக்கை
# 2015 ம் ஆண்டு

## 1. அறிமுகம்.

1968 ஆண்டின் 32 ம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக 1972 ம் ஆண்டு முதல் வயது 18 க்கு மேற்பட்ட இலங்கையில் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்ட நிரந்தரமாக குடியிருப்பவர்களை பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டை வழங்குதல் ஆரம்பமாகியது. அந்த சட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு ஏற்ப 1981 ம் ஆண்டிலிருந்து ஆட்களைப் பதிவு செய்யும் வயது 16 ஆக மாற்றப்பட்டது.

- **நோக்கக் கூற்று**
  நம்பகரமான ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை

- **பணிக் கூற்று**
  சகல இலங்கைப் பிரஜைகளையும் உறுதிப்படுத்தும் ஆளடையாளம்.

- **நோக்கங்கள்**
  இந்நாட்டிற்குள் சகல இலங்கைப் பிரஜைகளினதும் மனித உரிமை, சமூக , பொருளாதார, அரசியல் மற்றும் சட்ட உரிமைகள் என்பவற்றை பாதுகாப்பதுடன், நாட்டை விட்டு செல்லும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பினை வழங்குதல், அவரது தரவுகளை உள்ளடக்கி தேசிய பிரஜைகளின் தரவு மையத்தினை உருவாக்குதல், எந்தவொரு பிரஜையினது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் தேசிய மற்றும் வேறு நிறுவனங்களுக்கு தரவுகளை வழங்குதல் மற்றும் இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கும் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பினை வழங்குதல்.

- **பிரதான கடமை**
  - சகல இலங்கைப் பிரஜையினதும் தனி நபர் தரவுகளை சேகரித்து தேசிய தரவுகள் மையமொன்றினை ஆரம்பித்து அதனை முன்னெடுத்துச் செல்லல்.
  - பொருத்தமான இலங்கைப் பிஜைகளுக்கு தேசிய அடையாள அட்டையினை வழங்குதல்.
  - தேசிய புலனாய்வு மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்கு அவசியமாகின்ற போது நபர்கள் தொடர்பான தரவுகளை விசாரித்தல், உறுதிப்படுத்தல் ,தரவுகள் மற்றும் அறிவை பரிமாற்றம் செய்தல்.

- **திணைக்களத்தின் பொறுப்பு**
  - சகல இலங்கைப் பிரஜையினதும் தனிநபர் தரவுகளை சேகரித்து தேசிய நபர்களின் தரவுகள் களஞ்சியத்தினை உருவாக்கி அதனை முன்னெடுத்துச் செல்லல்.
  - குறித்த வயதினை பூர்த்தி செய்த சகல இலங்கைப் பிரஜைகளும் பதிவு செய்யப்பட்டு தேசிய அடையாள அட்டையினை விநியோகித்தல்.
  - இலங்கைப் பிஜைகளது தனிநபர் தரவுகளை உறுதிப்படுத்தி அவற்றை அத்தாட்சிப்படுத்தல்.
  - அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தரவுகள் மற்றும் அறிவினை பரிமாற்றம் செய்தல்.
  - நவீன தொழிநுட்ப அறிவு மற்றும் மனித வளத்தினை விருத்தி செய்வதனூடாக திணைக்களத்தின் திறனை கட்டியெழுப்புதல்.
  - தேசிய பாதுகாப்பிற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பினை வழங்குதல்.


## 2. அடையாள அட்டை வழங்கல்.

- சாதாரண சேவை

2015 ஆண்டில் ஜனவரி 01 ம் திகதி முதல் திசம்பர் 31 ம் திகதி வரையான காலப் பகுதியில் சாதாரண சேவையின் கீழ் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

| மாதம் | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 46,190 | 67,667 |
| பெப்ரவரி | 50,763 | 64,816 |
| மார்ச்சு | 69,250 | 72,095 |
| ஏப்பிரல் | 72,029 | 47,244 |
| மே | 89,194 | 50,677 |
| ஜூன் | 94,842 | 62,755 |
| ஜூலை | 107,740 | 52,082 |
| ஆகஸ்ட் | 80,136 | 84,968 |
| செப்டம்பர் | 56,862 | 119,950 |
| ஒக்டோபர் | 50,560 | 68,195 |
| நவம்பர் | 40,546 | 93,073 |
| டிசம்பர் | 39,316 | 49,593 |
| **மொத்தம்** | **797,428** | **833,115** |

மேலேயுள்ள வகைப்படுத்தலில் கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடு, உரிய முறையில் பூரணப்படுத்தப் படாத மற்றும் வலிதற்றதாக்கப்பட்ட விண்ணப்பங்களாகும்.





கவனிக்க : சில மாதங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப படிவங்களுக்கு அதிகமாக விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பது உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகளை தயாரிக்க முடியாமல் போனமையினாலாகும். ஏனைய மாதங்களில் அவ்விண்ணப்ப படிவங்களில் காணப்பட்ட குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அவற்றிற்கான தேசிய அடையாள அட்டைகளை தயாரித்தமையே சில மாதங்களில் பெற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்கு அதிகமாக விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை அதிகமானதற்கு காரணமாகும்.

- **ஒரு நாள் சேவை**

அவசர நிலைமைகளில் விரைவாக அடையாள அட்டைபெற்றுக் கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகளுக்காக ஒரே நாளில் அடையாள அட்டையை வழங்கும் விரைவு வேலைத்திட்டம் (ஒரு நாள் சேவை) 2003.09.01 ஆரம்பமாகியது. இதன் கீழ் ஓர் அடையாள அட்டைக்கு 500/- ரூபா அரசு அனுமதித்த கட்டணம் அறவிடப்பட்டதோடு 2015 ஜூலை மாதம் 01 ஆம் திகதி முதல் ஒரு நாள் சேவைக் கட்டணம் 1000/- ரூபாவாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.


ஒரே நாள் சேவை வேலைத்திட்டத்தின் கீழ் 2015 ஆண்டில் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் ஊடாக திணைக்களம் பெற்ற வருமானம் கீழ்வருமாறு :

| மாதம் | விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | பெற்ற வருமானம் (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | **14,946** | **7,473,000.00** |
| பெப்ரவரி | **17,262** | **8,631,000.00** |
| மார்ச்சு | **18,540** | **9,270,000.00** |
| ஏப்பிரல் | **12,049** | **6,024,500.00** |
| மே | **15,811** | **7,905,500.00** |
| ஜூன் | **22,274** | **11,137,000.00** |
| ஜூலை | **20,941** | **20,941,000.00** |
| ஆகஸ்ட் | **19,321** | **19,321,000.00** |
| செப்டம்பர் | **16,904** | **16,904,000.00** |
| ஒக்டோபர் | **17,268** | **17,268,000.00** |
| நவம்பர் | **16,974** | **16,974,000.00** |
| டிசம்பர் | **16,584** | **16,584,000.00** |
| மொத்தம் | **208,874** | **158,433,000.00** |



- **விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கல்**

| ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1972 | 1,305,801 | 22,459 | 1994 | 545,121 | 493,093 |
| 1973 | 5,570,696 | 680,024 | 1995 | 907,560 | 616,915 |
| 1974 | 619,855 | 5,071,234 | 1996 | 816,275 | 853,191 |
| 1975 | 72,268 | 248,694 | 1997 | 782,988 | 636,187 |
| 1976 | 138,216 | 246,694 | 1998 | 771,597 | 655,580 |
| 1977 | 152,221 | 221,783 | 1999 | 731,079 | 753,560 |
| 1978 | 236,834 | 423,276 | 2000 | 758,463 | 651,787 |
| 1979 | 186,813 | 194,436 | 2001 | 711,295 | 679,250 |
| 1980 | 360,510 | 297,702 | 2002 | 794,357 | 700,000 |
| 1981 | 479,724 | 474,577 | 2003 | 633,168 | 635,046 |
| 1982 | 425,904 | 505,559 | 2004 | 607,111 | 524,241 |
| 1983 | 358,830 | 342,088 | 2005 | 731,310 | 564,872 |
| 1984 | 451,651 | 421,010 | 2006 | 1,196,276 | 897,674 |
| 1985 | 446,619 | 458,557 | 2007 | 1,086,236 | 958,445 |
| 1986 | 364,150 | 374,074 | 2008 | 933,663 | 818,407 |
| 1987 | 372,108 | 353,819 | 2009 | 986,670 | 941,537 |
| 1988 | 431,102 | 409,870 | 2010 | 899,349 | 890,084 |
| 1989 | 365,966 | 333,083 | 2011 | 752,399 | 835,548 |
| 1990 | 491,622 | 397,135 | 2012 | 900,751 | 781,922 |
| 1991 | 676,681 | 646,150 | 2013 | 1,048,343 | 969,617 |
| 1992 | 568,493 | 545,957 | 2014 | 957,382 | 881,721 |
| 1993 | 528,628 | 468,494 | 2015 | 1,006,302 | 1,041,989 |
| | | | மொத்தம் | **33,162,387** | **28,958,896** |



3. **தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.**

- **சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட அடையாள அட்டையினை அறிமுகப் படுத்தல்.**

  சிங்கள மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் அடையாள அட்டைகள் எழுதப்பட்டு வழங்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளின் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட இல. SC Appilication No.93/2013(F/R) என்ற மனித உரிமைகள் மனுவின் விசாரணை சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தின் மூலம், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் வரை 2014.01.01 ம் திகதி முதல் சிங்கள மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது

  இதுவரை விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை கைகளால் எழுதப்பட்டு ஒரு மொழியில் மாத்திரமே வழங்கப்பட்டது. அடையாள அட்டை இரு மொழிகளிலும் கைகளால் எழுதப்படும் பட்சத்தில் அதற்காக செலவிடப்படும் கால அளவானது முன்னர் ஒரு மொழியில் மாத்திரமே எழுதப்படும் கால அளவினைவிடவும் இருமடங்கான கால அளவினை செலவிட வேண்டி வரும். அவ்வாறே அதற்காக தேவைப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாகும். இதற்கான தீர்வாக தகவல் தொழினுட்பத்தினை பயன்படுத்தி சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமான அச்சிடப்பட்ட அடையாள அட்டையினை 2014.02.28ம் திகதி முதல் விநியோகிக்கின்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

- **தற்காலிக எழுதுவினைஞர் ( தமிழ் மொழி ) ஆட்சேர்ப்பு செய்தல்.**

  தேசிய அடையாள அட்டை தயாரிப்பதற்காக விசேடமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட திணைக்கள் ஊழியர்களாகிய தயாரிப்பு உதவியாளர்களுக்கிடையே தமிழ் மொழியில் எழுத வேண்டிய அடையாள அட்டைகளை தமிழில் எழுதக் கூடியவர்கள் குறைவாக இருப்பதன் காரணமாக தமிழ் மொழியில் அடையாள அட்டை வழங்குதலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

  இது தொடர்பாக அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சிற்குச் செய்யப்பட்டுள்ள வேண்டுகோளுக்கு அமைய அந்த அமைச்சின் ஊடாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் (UNDP) உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் "நீதிக்கான சம வாய்ப்பு (Equal Access to Justice) செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 16 பேர் ஆரம்பத்தில் ரூபா 9000/- மாதாந்த கொடுப்பனவுக்கமைய தற்காலிக நியமனம் என்ற அடிப்படையில் எழுதுவினைஞர்களாக (தமிழ் மொழி) சேர்த்து கொள்ளப்பட்டார்கள். அவ்வுத்தியோகத்தர்கள் பின்வரும் முறையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.; இதற்கான ஒதுக்கீட்டு நிதி மேலே கூறிய செயற்றிட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

| கால வரையறை | எழுதுவினைஞர் எண்ணிக்கை | கொடுப்பனவு முறை |
|---|---|---|
| 2009.08.07 - 2009.11.06 | 16 | மாதாந்த கொடுப்பனவு ரூ.9000/- |
| 2009.11.16 - 2010.03.15 | 16 | |
| 2010.04.15 - 2010.08.31 | 23 | மாதாந்த கொடுப்பனவு ரூ.10000/- |
| 2010.09.15 - 2011.02.14 | 07 | மாதாந்த கொடுப்பனவு ரூ.15000/- |
| 2010.10.04 - 2011.02.14 | 23 | |
| 2011.08.01 – 2011.12.31 | 07 | |
| 2012.01.04 – 2012.05.31 | 07 | |
| 2012.06.06 – 2012.07.31 | 07 | |
| 2012.08.01 – 2012.12.31 | 07 | |
| 2013.04.08 – 2013.07.31 | 05 | |
| 2013.08.07 – 2013.12.31 | 07 | |
| 2014.05.16 – 2014.09.16 | 07 | |
| 2014.07.14 – 2014.09.16 | 01 | |
| 2014.11.01 – 2014.11.19 | 08 | |

- **ஒப்பந்த அடிப்படையில் தமிழ் மொழிமூல எழுதுனர்களை சேவையில் இணைத்தல்.**

2014.02.28ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமான அடையாள அட்டைகளை விநியோகிக்கும் புதிய கணனிமயப்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைக்கேற்ப எல்லா அடையாள அட்டைகளும் தமிழ் மொழிக்கு மாற்றப்பட வேண்டுமென்பது அவசியமான விடயமாகும். அதற்காக திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள தமிழ் மொழி மூலம் கடமை புரியக்கூடிய உத்தியோகத்தர்களின் தட்டுப்பாடு காரணமாக தமிழ் எழுதுனர்கள் 10 பேரை ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ள முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்குறிப்பிட்டபடி ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் இணைத்துக கொள்ளப்பட்டனர்.

| காலப்பகுதி | எழுதுனர்களின் எண்ணிக்கை | கொடுப்பனவு முறை |
|---|---|---|
| 2014.11.21 – 2015.11.20 | 8 | ரூபா. 437/- |
| 2015.01.16 - 2016.01.15 | 2 | ரூபா. 437/- |
| 2015.11.21 - 2016.11.20 | 8 | ரூபா. 437/- |

- **சிவில் பாதுகாப்பு அலுவலர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல்.**

தேசிய அடையாள அட்டை தயாரித்தல் செயன்முறையில் நேரடி பங்களிப்பினை வழங்கிய உற்பத்தி உதவியாளர் தொகுதி உத்தியோகத்தர்கள் தர உயர்வுகள் பெற்று வேறு சேவைகளுக்குச் இணைக்கப்பட்டு சென்றமையினால் அடையாள அட்டை தயாரிக்கும் நடவடிக்கையில் இணைக்கப்படும் அலுவலர்கள் வரையறுக்கப்பட்டனர். அதனால், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 47 பேர் 2010.09.20 ம் திகதி முதல் 2015 வரை இத் திணைக்களத்தில் சேவைக்காக அமர்த்தப்பட்டனர். 2014 ஆண்டு ஜனவரி மாதம் முதல் அவ்வுத்தியோகத்தர்களில் 16 பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். 2015 ஆண்டு முகாமைத்துவ உதவியாளர் சேவையில் புதிய உத்தியோகத்தர்கள் இத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டதுடன் 2015.10.13 ஆம் திகதி முதல் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவை நிறுத்தப்பட்டது.

**செய்முறைப் பயிற்சி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல்.**

மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கு மேலதிகமாக தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சி பெற்ற மாணவர்களையும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நாளொன்றுக்கு ரூபா 500 என்ற கொடுப்பனவு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

| கால வரையறை | பயிலுனர்களின் எண்ணிக்கை | தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|
| 2011.08.10 – 2012.02.09 | 6 | தேசிய இளைஞர் சேவை மன்றம் |
| 2011.08.15 – 2012.02.14 | 4 | லலித் அதுலத்முதலி தொழிற்பயிற்சி நிலையம் |
| 2011.12.08 – 2012.06.07 | 1 | தெஹிவளை தொழிற்பயிற்சி நிலையம் |
| 2012.04.02 – 2012.10.01 | 4 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை |
| 2012.04.20 – 2012.10.19 | 1 | கம்பஹா தொழிநுட்ப கல்லூரி |
| 2012.10.01 – 2013.03.31 | 2 | இலங்கை கொரிய தொழிநுட்ப கல்லூரி |
| 2012.12.10 – 2013.06.09 | 1 | கம்பஹா தொழிநுட்ப கல்லூரி |
| 2013.01.21 – 2013.07.20 | 2 | லலித் அதுலத்முதலி தொழிற்பயிற்சி நிலையம் |
| 2014.07.07 – 2015.01.06 | 1 | தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை |
| 2014.07.15 – 2015.01.14 | 1 | தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை |
| 2014.02.18 – 2014.07.04 | 1 | இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிருவகம் |
| 2014.02.18 – 2014.08.17 | 2 | இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிருவகம் |
| 2014.04.28 – 2014.10.27 | 1 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு |
| 2014.05.20 – 2014.11.19 | 4 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு |
| 2014.07.07 – 2015.01.06 | 1 | தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை |
| 2014.07.15 – 2015.01.14 | 1 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை |

4. **அடையாள அட்டை வழங்கல் பணிகளின் பொருட்டு தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல்**.

- **கணனிக்கு அமைய இலக்கம் இடுதல்.**

  முதல் முறையாக வழங்கப்படும் அடையாள அட்டை தொடர்பில் இலக்கம் வழங்குதல் 2007 ஜனவரி 01 ம் திகதி முதல் திணைக்களத்தில் இடம் பெற்று வகின்றது.

- **கணனியை பயன்படுத்தி அடையாள அட்டை தயாரித்தல்**

  கணனியை பயன்படுத்தி சிங்களம் மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் அச்சிடப்பட்டு விநியோகிக்கும் முறை 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

- **கணனி சுட்டட்டைகளை வழங்கல்.**

  தொலைந்து போன அடையாள அட்டைகள் தொடர்பில் இணைப் பிரதி வழங்கும் போது மற்றும் வைத்திருக்கும் அடையாள அட்டையில் திருத்தங்கள் செய்யும் போது தேவைப்படும் திணைக்கள அறிக்கை (சுட்டட்டைகளை ) தேடுதல் கையால் மேறகொள்ளப்பட்ட ஒரு பணியாகும். தற்போது அந்த சுட்டட்டைகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதால் அவை கணனி ஊடாக ஆய்வு செய்யப்படுகின்றன.

5. **நடமாடும் சேவை.**

தேர்தலில் வாக்களித்தலுக்கு அடையாள அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதனால் நடமாடும் சேவை விரைவாக இடம் பெறச் செய்ய வேண்டியேற்பட்டது. இந்த நடமாடும் சேவை ஊடாக தூர இடங்களில் வசிக்கும் மக்களிடம் சென்று பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களைப் பொறுப்பேற்றல் இடம் பெறுகின்றது. நிலைய மட்டத்தில் செயற்படுத்தப்படும் நடமாடும் சேவை வேலைத் திட்டத்தின் கீழ் 2015 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரைக்கும் 18,747 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

6. **பயிற்சி வழங்கல் செயற்பாடுகள்.**

இத்திணைக்கள உத்தியோகத்தர்களின் பெறுபேற்றினை விருத்தி செய்வதற்காக 2015 ம் ஆண்டு பூராகவும் அவர்கள் வெவ்வேறுபட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றி இருந்தார்கள். இதனூடாக திணைக்களத்தில் வினைத்திறனுடனான சேவை செய்யவும் மக்களுக்கு உடனடியான சேவையினை வழங்கவும் இது பெரிதும் உதவியாக காணப்பட்டது.

2015 ம் ஆண்டில் திணைக்கள உத்தியோகத்தர்கள் பெற்ற பயிற்சிகள் சம்பந்தமாக இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

7. **ஊக்கக் கொடுப்பனவு வழங்கல்**

2003 ம் ஆண்டு முதல் விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளின் பேரில் ஒரே நாளில் அடையாள அட்டை வழங்கும் பொருட்டு ஒரு நாள் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஒரு நாள் சேவை பணிக்குழு தொடர்பான முறையான அனுமதியுடன் ஊக்கக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இவ்வூக்கக் கொடுப்பனவானது 2015 ம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

8. **சட்டம் தொடர்பான கடமைகள்**

குறைபாடுகள் கொண்ட விண்ணப்ப படிவம் சமர்ப்பித்தல், ஐயம் கொள்ளக் கூடிய விண்ணப்ப படிவ இலக்கத்தை உறுதிப் படுத்தல், பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஊடாக கோரப்படும் விளக்கங்களுக்குப் பதில் அளித்தல், ஐயத்துக்கிடமான பிறப்புச் சான்றிதழை ஆய்வு செய்தல் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தினை மீறுதல் போன்றவற்றிற்கு தண்டம் அறவிடல் போன்றவை தொடர்பில் 2015 ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் சம்பந்தமான விபரம் இணைப்பு II ல் தரப்பட்டுள்ளது:-

9. **பௌதிக வளங்களை முகாமைத்துவம் செய்தல்**

- **காணிகள் மற்றும் கட்டிடங்கள்**

இலக்கம் 45, கெப்பிட்டிபொல வீதி, கொழும்பு – 05 என்ற இடத்தில் அமைந்திருக்கும் கட்டிடங்கள் திணைக்களத்துக்குச் சொந்தமானது.

- **வாடகைக்கு எடுத்தல்**

திணைக்களத்தின் விண்ணப்ப படிவங்களை களஞ்சியப் படுத்துவதன் பொருட்டு நுகேகொடையில் அமைந்துள்ள 12,180 சதுர அடி பரப்பளவுள்ள “ யமுனா கட்டிடத்தை ”' சகல குத்தகைத் தொகையுடன் ரூபா 527,250/= மாதாந்த வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

- **ஏனைய சொத்துக்கள்**

தற்போது திணைக்களத்துக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :-

| | இலக்கம் | வாகனம் | வகை | கொள்வனவு செய்த திகதி | கொள்வனவு செய்த பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | NA 2147 | L 300 வேன் | மிட்சுபிசி L300 | 2006.05.24 | 4,450,000.00 |
| 2 | KB 8577 | கார் | நிசான் ஸனீ சுபர் செலுன் | 2006.05.23 | 3,400,000.00 |
| 3 | PA 9855 | L 300 வேன் | மிட்சுபிசி L300 | 2006.11.22 | 4,250,000.00 |
| 4 | PB 6775 | L 300 வேன் | மிட்சுபிசி L300 | 2008.08.11 | 6,250,000.00 |
| 5 | PC 3265 | கெப் (CAB) வாகனம் | மகேந்திரா பொலெரோ | 2011.06.28 | 2,627,353.00 |
| 6 | KP 5832 | ஜீப் வாகனம் | மகேந்திரா ஸ்கோபியோ | 2011.08.18 | 4,587,528.00 |
| 7 | WP 6059 | மோட்டார் சைக்கிள் | டிவீஎஸ் - ஸ்டார் ஸ்போர்ட் | 2011.06.14 | 104,496.00 |
| 8 | PE 1266 | கெப் வாகனம் | டொயோடா ஹைலக்ஸ் | 2012.06.13 | 7,500,000.00 |
| 9 | KX 7866 | கார் | நிசான் சில்பி | 2014.01.19 | 9,390,000.00 |
| 10 | PF7780 | கெப் (CAB) வாகனம் | மிட்சுபிசி L200 | 2014.12.18 | 6,390,000.00 |
| 11 | CAN6891 | கார் | நிசான் சனீ N17 | 2015.12.08 | 5,795,000.00 |
| 12 | CAN7833 | கார் | நிசான் சனீ N17 | 2015.12.10 | 5,795,000.00 |

10. **நிதி முன்னேற்றம்**

- **2015 ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு மற்றும் செலவுகள் பின்வருமாறு**

| இல | | செயற்பாடுகள் | செலவு திட்டம் 2015 (ரூ.ஆயிரத்தில்) | செயல்மதிப்பீடு (ரூ. ஆயிரத்தில்) 2015.12.31 | |
|---|---|---|---|---|---|
| | | மீண்டுவரும் செலவினம் | | | |
| 1 | | தனிநபர் சம்பளம் | 507,845 | நிதி | 505,098 |
| | | | | பௌதீக | |
| 2 | | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 63,394 | நிதி | 61,832 |
| | | | | பௌதீக | |
| | | மொத்த மீண்டுவரும் செலவினம் | 571,239 | | 566,930 |
| | | நடைமுறைச் செலவு | | | |
| | | நிலையானசொத்துக்களை புனர்நிர்மானம் செய்தலும் அபிவிருத்தி செய்தலும் | | | |
| 3 | 2001 | கட்டிடமும் கட்டிட நிர்மாணமும் | 3,500 | நிதி | 1,276 |
| | | | | பௌதீக | 3 |
| 4 | 2002 | இயந்திரமும் இயந்திர பொருத்திகளும் | 500 | நிதி | 381 |
| | | | | பௌதீக | 9 |
| 5 | 2003 | வாகனங்கள் | 500 | நிதி | 485 |
| | | | | பௌதீக | 6 |
| | | நிலையான சொத்துக்களை கையேற்றல் | | | |
| 6 | 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 5,300 | நிதி | 5,212 |
| | | | | பௌதீக | 91 |
| 7 | 2103 | இயந்திரமும் இயந்திர பொருத்திகளும் | 2,341 | நிதி | 2,340 |
| | | | | பௌதீக | 20 |
| | | மனித வள அபிவிருத்தி | | | |
| 8 | 2401 | அலுவலர்களுக்கான பயிற்சி(அ) | 1,200 | நிதி | 1,194 |
| | | | | பௌதீக | 37 |
| | | ஏனைய நிலையான செலவு | | | |
| 9 | 2502 | முதலீடு | 90,000 | நிதி | 89,977 |
| | | | | பௌதீக | |
| | | நடைமுறை செலவின் மொத்தம் | 103,341 | நிதி | 100,865 |
| | | | | பௌதீக | |
| | | மொத்தச் செலவு | 674,580 | நிதி | 667,795 |

- **2015 ம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு மற்றும் வருமானம் கீழ் வருமாறு**

| செயற்பாடுகள் | வருமான மதிப்பீடு 2015 (ரூ.) | செயல்மதிப்பீடு 2015.12.31 (ரூ.) |
|---|---|---|
| **ஒரு நாள் சேவை வருமானம்** | **105,000,000** | **158,433,000** |
| **தண்டப்பணம்/ கட்டணம்** | **200,000** | **2,107,8000** |
| **முத்திரை வருமானம்** | **10,200,000** | **10,633,983** |
| **மொத்தம்** | **115,400,000** | **171,174,783** |

## 11. பணிக்குழு விபரம்

பணிக்குழுவின் புதிய நியமனம்,ஓய்வு பெறுதல், பதவி விலகல், இடமாற்றம், விடுவித்தல் மற்றும் உயர்பதவி ஆகிய உத்தியோகத்தர் எண்ணிக்கை கீழ் வருமாறு

### I. புதிய ஆட்சேர்ப்பு

- இலங்கை நிர்வாக சேவை உத்தயோகத்தர்கள் 06 பேர்
- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை உத்தியோகத்தர்கள் 16 பேர்
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்கள் 33 பேர்
- அலுவலக உதவியாளர் சேவையில் 27 பேர்

### II. இளைப்பாறியோர்

- இலங்கை நிர்வாக சேவையில் 01 உத்தியோகத்தர்
- அரச முகாமைத்துவ சேவையிலிருந்து 05 பேர்
- அலுவலக உதவியாளர் சேவையிலிருந்து ஒருவர்.

### III. இராஜினாமா செய்தல்

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் 02 பேர்
- உற்பத்தி உதவியாளர் ஒருவர்

### IV. இடமாற்றம்

- இலங்கை நிர்வாக சேவையில் உத்தியோகத்தர்கள் 6 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் உத்தியோகத்தர்கள் 05 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- இலங்கை கணக்காளர் சேவையில் 01 உத்தியோகத்தர் இடமாற்றமாகி வந்துள்ளார்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் விசேட தரத்தில் 02 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளார்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து 14 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் 25 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 27 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் உத்தியோகத்தர் 27 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- சாரதி சேவையில் 06 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் 02 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.
- அலுவலக உதவியாளர் சேவையில் 12 பேர் இடமாற்றமாகி வந்திருப்பதுடன் 09 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.

### V. சேவை விடுவிப்பு

- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து 04 பேர்
- அமுலாக்கல் உத்தியோகத்தர் ஒருவர்.
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 12 பேர்
- அலுவலக உதவியாளர் சேவையில் ஒருவர்

## VI. பதவி உயர்வு

- இலங்கை நிர்வாக சேவை தரம் II உத்தியோகத்தர் ஒருவர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளார்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை II தரத்திலிருந்து உத்தியோகத்தர் ஒருவர் இலங்கை நிர்வாக சேவையில் நியமனம் பெற்று சென்றுள்ளார்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை II தரத்திலிருந்து உத்தியோகத்தர்கள் 04 பேர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை III ம் தரத்திலிருந்து உத்தியோகர் ஒருவர் அ.மு.உதவியாளர் சேவை தரம் II இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் சேவையில் 03 பேர் 3ம் வகுப்பில் III ம் தரத்திலிருந்து 3ம் வகுப்பில் II ம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்.
- அலுவலக உதவியாளர் சேவை தரம் I ஊழியர்கள் மூவர் விசேட தரத்திற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்.
- அலுவலக உதவியாளர் சேவை தரம் II ஊழியர் இருவர் அலுவலக உதவியாளர் சேவை தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளார்.

திணைக்களத்தின் பணியாளர்கள் பற்றிய விபர அறிக்கை இணைப்பு (III) இல் காணலாம்

## 12. இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டம்

**கருத்திட்டத்தின் நோக்கம்**

- 15 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளின் தரவுகள், உயிரியியல் பண்பு ரீதியான தரவுகளை உள்ளடக்கிய தேசிய பிரஜைகளின் தரவுத் தளத்தினை உருவாக்குதல்
- தற்பொழுது பாவனையிலுள்ள தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக தனிநபர் ஆளடையாளத்தை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையினை விநியோகித்தல்.
- அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தகவல் பறிமாற்றிக் கொள்ளும் மற்றும் தகவல் உறுதிப்படுத்திக்கொள்ளும் செயல்முறைமையினை ஸ்தாபித்தல்.
- தேசிய பாதுகாப்பிற்கு மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான வசதிகளை வழங்கல்.

**செயற்திட்ட பிரதான பொறுப்புக்கள்**

- தேசிய பிரஜைகளின் தரவுத்தளத்தினை நிர்மாணித்தல் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கான ஆட்களைப் பதிவு செய்யும் சட்டமூலத்தினை திருத்தம் செய்தல் மற்றும் அதற்கான வரைபுகளை தயார்ப்படுத்தல்.
- செயற்திட்ட இயக்க செயற்பாடுகளை மீளமைத்தல்
- தரவுகள் சேகரிக்கும் நடவடிக்கை தொடர்பாக ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் கிளைக் காரியாலயங்களை செயலாற்று மத்திய நிலையங்களாக நிறுவுதல் மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.
- பாவனையிலுள்ள அடையாள அட்டையினை புதிய படிவத்திற்கு அமைய பிளாஸ்டிக் அட்டையில் விநியோகித்தல்.
- பத்தரமுல்லையில் அமைந்துள்ள SPI கட்டிடத்தில் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்ட இயக்க கிளை என்பவற்றை ஸ்தாபித்தல்.
- தகவல் தொழிநுட்ப அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- தரவு சேகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை ( Data Capturing Programme) செயற்படுத்தல்.
- தரவு இலத்திரனியல்படுத்தல் (Digitizing) மற்றும் தரவு சரிபார்த்தல். (Data Verification)
- பிரஜைகளின் தரவுகளை மற்றும் உயிரியியல் பண்பு ரீதியான தரவுகள் மற்றும் ICAO தரத்தில் பெற்றுக்கொண்ட புகைப்படம் உள்ளடங்களாக பிரஜைகளின் தரவுத் தளத்தினை அமைத்தல்.
- இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகித்தல்.
- தகவல் பரிமாற்றம் செய்தல் மற்றும் தகவல் உறுதிப்படுத்தல் செயன்முறையினை ஸ்தாபித்தல்.

### 3. திருத்தப்பட்ட செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

#### 3.1 பின்னணி

தகவல் தொழிநுட்பத்தினை பயன்படுத்தி சகல அரச, தனியார் துறைகளிலுள்ள நிறுவனங்கள் தமது சேவையினை மேலும் வினைத்திறனுடன் பொதுமக்களுக்கு வழங்குகின்ற நடவடிக்கையில் தனிநபர் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு அடிப்படையாக கொள்கின்ற முதல் ஆவணம் தேசிய அடையாள அட்டை ஆகும். தனிநபர்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்துகின்ற தேசிய அடையாள அட்டை 1968 ஆண்டு 32ம் இலக்க ஆட்பதிவு சட்டத்தின் பிரகாரம் ஆட்பதிவு திணைக்களத்தினால் 1972 ஆண்டு முதல் மனித வலுவினை மாத்திரம் பயன்படுத்தி விநியோகிக்கப்படுகின்ற செயன்முறையினாலும் நவீன தொழிநுட்பத்திற்கமைய தயாரிக்கப்படாமையின் காரணமாக பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக பொதுமக்கள் மற்றும் பொதுமக்களுக்காக சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் இத்திணைக்களமும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. அதனால் நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் தனிநபர் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படுவதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும் அடையாள அட்டை தயாரிப்பதற்கு பாவிக்கப்படுகின்ற இயந்திரங்கள் காலாவதியாகி உள்ளமை மற்றும் அதற்கு தேவையான மேலதிக உதிரிபாகங்கள் சந்தையில் கொள்வனவு செய்ய முடியாமை மற்றும் அடையாள அட்டைக்காகப் பாவிக்கப்படும் பாதுகாப்பு அட்டை சந்தையில் பெற்றுக் கொள்வதில் சிரமம் போன்றவற்றால் அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை திணைக்களத்திற்கு அதிக சிரமமான காரியமாக உள்ளது.

நடைமுறையிலுள்ள அடையாள அட்டையில் மற்றும் விநியோகிக்கப்படுகின்ற செயன்முறையில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வாக பிரஜைகளை பதிவு செய்வதற்காக இலத்திரனியல் தரவு களஞ்சியத்தினை உருவாக்கி அதன் பிரகாரம் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கும் செயற்திட்டத்திற்கு 2011.08.17 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அடையாள அட்டை விநியோகிக்கும்போது தனிநபர் அடையாளம் உறுதிப்படுத்தலானது, ஆவணங்களை மட்டும் அடிப்படையாக்க் கொண்டு இடம்பெறுகின்றமையினால் அந்நடவடிக்கை சரியாக இடம்பெறுவதில்லை என உறுதியாகியுள்ளது. உயிரியல் பண்புத் தரவாக நபர்களின் கைவிரல் அடையாளத்தினை பெற்றுக்கொள்வதன் மூலம் தனிநபர் அடையாளத்தினை மேலும் சரியாக உறதிப்படுத்திக்கொள்ள முடியும் என்பதால், புதிய முறைமைக்கு ஏற்ப 15 வயதிற்கு மேற்பட்ட சகல இலங்கை பிரஜைகளினதும் உயிரியல் பண்புத் தரவாக கைவிரல் அடையாளம் உள்ளடங்கலாக, தனிநபர்களின் தகவல்கள் மற்றும் குடும்பத் தகவல்கள் மற்றும் சர்வதேச தரத்திலான புகைப்படம் உள்ளடங்கிய தேசிய தனிநபர் பெயர் பட்டியலொன்றை தயாரித்து அதன் பிரகாரம் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் 2009 ஜூலை மாதம் முடிவுற்றவுடன் சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திற்கும் பிரயாணம் செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதனால் நபர் ஒருவரினால் மேல் நீதிமன்றத்தில் முன்வைத்த மனுவிற்கு அமைய நடைமுறையிலுள்ள அடையாள அட்டையினை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் விநியோகிப்பதற்கு கட்டளை இடப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள செயன்முறையினூடாக இரு மொழிகளிலும் அடையாள அட்டை விநியோகிக்க முடியாமையினால் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் செயன்முறை ஸ்தாபிக்கும் வரை இடைக்கால தீர்வுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. அதன் பிரகாரம் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கும் செயன்முறைமைக்கு அடிப்படையாக இடைக்கால தீர்வாக நடைமுறையிலுள்ள அடையாள அட்டை விநியோகிக்கும் செயன்முறை 2014 பெப்ரவரி 28 ம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 15 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளின் உயிரியல் தரவு மற்றும் உயிரியியல் பண்புத் தரவாக கைவிரல் அடையாளம் பெற்றுக்கொள்வது தொடர்பில் தேவையான சகல நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக ஆட்பதிவு சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக உத்தேசிக்கப்பட்ட காலத்தினை விட அதிக காலம் கடந்தமையினால் தரவு சேகரிப்பு தாமதமடைந்தது. திருத்தத்திற்கான அமைச்சரவை அனுமதி 2015.04.01 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதனை பாராளுமன்ற அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற அனுமதி வழங்கப்பட்டவுடன் தரவு சேகரிப்பு ஆரம்பிக்க முடியும்.

மேலும், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயன்முறை ஸ்தாபிப்பதற்கான தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு விலைமனு கோருவதன் மூலம் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட கால எல்லைக்கு மேலதிகமாக நீண்ட காலம் கடந்துள்ளது. இந்நிலையில் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை துரிதப்படுத்துவதற்காக அதற்கு அடிப்படையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, தற்போது நடைமுறையிலுள்ள, இடைக்கால தீர்விற்கு தேவையான மேம்படுத்தப்பட்ட இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்ட நடவடிக்கைகள் பல படிமுறைகளின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

### 3.2 முதலாவது படிமுறை

### 3.2.1. நடைமுறையிலுள்ள அடையாள அட்டைக்கு பதிலாக பிளாஸ்டிக் அட்டை விநியோகித்தல்

தற்போது பாவிக்கப்படுகின்ற சிங்கள மொழியில் மாத்திரம் கையால் எழுதுவதற்கான அச்சிடப்பட்ட பாதுகாப்பு அட்டையினை இரு மொழிகளிலும் இடைக்கால தீர்வாக விநியோகிப்பது மிகவும் சிரமமாக இருப்பதனால் இலத்திரனியல் அடையாள அட்டைக்காக தயாரித்துள்ள தகவல் உள்ளடங்கிய பிளாஸ்டிக் அட்டை விநியோகித்தல்.

இடைக்கால தீர்வு செயற்பாட்டிற்காக மென்பொருள், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் தேவைக்கமைய உருவாக்கப்பட்டுள்ளதால், அதனூடாக பிளாஸ்டிக் அட்டை விநியோகிக்கக்கூடியதாக உள்ளது. அதற்காக முதலில் 25 அச்சு இயந்திரங்கள் மற்றும் 2 மில்லியன் அச்சிடப்பட்ட பிளாஸ்டிக் அட்டைகள் என்பன கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் அட்டையில் அச்சிடப்பட்ட தேசிய அடையாள அட்டை 2016 பெப்ரவரி மாதத்திலிருந்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

**3.2.2 திணைக்கள பிரதேச காரியாலயங்கள் ஊடாக இலத்திரனியல் மூலமாக விண்ணப்பங்களின் தகவல்ளை பெற்றுக்கொள்ளல்.**

2007.06.06 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய திணைக்கள அலுவல்கள் பிரதேச மற்றும் மாகாண மட்டங்களில் பன்முகப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய 331 பிரதேச செயலகங்களிலும் திணைக்கள கிளைகளை அமைத்து பிரதேச செயலகமொன்றிற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் வீதம் இணைக்கப்பட்டுள்ளனர்.

புதிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு, தொலைந்த அடையாள அட்டைக்கு பதிலாக இணைப்பிரதி பெற்றுக்கொள்வதற்கு மற்றும் தகவல்களில் மாற்றம் ஏற்பதற்கமைய அடையாள அட்டையினை மாற்றம் செய்வதற்குரிய சகல விண்ணப்பங்களும், திணைக்கள பிரதேச காரியாலயத்திற்கு சமர்ப்பித்து அத்தகவல்களை இலத்திரனியலினூடாக பிரதான காரியாலயத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன இது பொதுமக்களுக்கு மிக இலகுவானதாக இருக்கும். இம் முறைமையினை அமைப்பதற்கு சகல பிரதேச செயலகங்களுக்கும் 02 கணனி, மடிக்கணனி, 02 ஸ்கேன் இயந்திரங்கள், அச்சு இயந்திரம் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு தகவல்கள் இலத்திரனியலூடாக பிரதான காரியாலயத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்கான தொடர்பாடல் இணைப்பு வசதி (Connectivity) சகல பிரதேச செயலகங்களுக்கும் ஏற்படுத்தப்படும்.

**3.2.3 இடைக்கால தீர்வு செயற்பாட்டினை செயற்படுத்துவதற்கு தேவையான கணனி எண்ணிக்கை**

இலத்திரனியல் அடையாள அட்டை செயற்பாட்டின் அடிப்படைக்கேற்ப தயாரிக்கப்பட்ட இடைக்கால தீர்வு செயற்பாட்டினை செயற்படுத்துவதற்கு 75 கணனிகள் கொள்வனவு செய்து நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.2.4. பௌதீக அடிப்படை வசதிகள் ஏற்படுத்தல்**

இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கையினை செயற்படுத்துவதற்காக இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மேலதிகமாக, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

i. 13 பிரதேச செயலகங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள திணைக்கள கிளைகளிற்காக நிரந்தர காரியாலய வசதி ஏற்படுத்தல்.
ii. இடர் மீளமைப்பு தரவு மையத்தினை அமைப்பதற்கு தேவையான கட்டிடத்தினை நிர்மாணித்தல். ஹம்பாந்தோட்டை சூரியவெவ தொழிநுட்ப பூங்காவில் தற்போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இடர் மீளமைப்பு தரவு மையம் நுவரெலியாவிற்கு கொண்டு செய்வதற்கான ஆலோசனைக்கு அமைச்சரவை அனுமதியினை பெற்று நுவரெலியா பிரதேச செயலக பிரிவில் அ மைந்துள்ள ஆட்பதிவு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிலத்தில் அதனை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
iii. பிரதான தரவு களஞ்சியத்தினை அமைப்பதற்கு பத்தரமுல்லையில் அமைந்துள்ள தனிநபர் அடையாளம் தொடர்பான செயலாளர் அலுவலக கட்டிடத்தில் தேவையான புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

**3.2.5 பிரஜைகளின் தகவல்கள் சேகரித்தல் மற்றும் அத்தகவல்களை இலத்திரனியல் படுத்தல்**

**I. 15 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளின் உயிரியல் தரவு மற்றும் உயிரியல் பண்புத் தரவு மற்றும் ICAO தரத்திலான புகைப்படத்துடனான தகவல்களை சேகரித்தல்**

தரவு சேகரித்தல் தொடர்பாக கிராம உத்தியோகத்தர் பிரிவு 14022 இனதும் கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் அல்லது உதவி பிரதேச செயலாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதோடு, தேவையான சகல உபகரணங்கள் மற்றும் ஆலோனைகள் சகல பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி ஆட்பதிவு சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு பாராளுமன்ற அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், திட்டமிட்டுள்ளவாறு குறித்த தகவல் சேகரிப்பு 06 மாத காலத்தினுள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**II. சேகரிக்கப்பட்ட தகவல்களை வழங்குனர் மூலமாக இலத்திரனியல்படுத்தல்.**

இதற்காக சர்வதேச போட்டி விலைமனு கோருவதன் மூலம் வழங்குனர் ஒருவரை தெரிவு செய்து அமைச்சரவை அனுமதியினை பெற்று, ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவு சேகரித்தல் ஆரம்பிக்கப்பட்டவுடன், தரவு இலத்திரனியல்படுத்தல் ஆரம்பிக்க முடியும் என்பதோடு, 11 மாதத்தினுள் அதனை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**III. தேசிய தனிநபர் பெயர் பட்டியல் உருவாக்கல்.**

தரவு சேகரித்தல் மற்றும் இலத்திரனியல்படுத்தல் மேற்கொள்ளப்படுவதற்கிடையில், இலத்திரனியல்படுத்தல் செய்யப்பட்ட ஒரு மில்லியனளவிலான நபர்களின் தகவல்களைக் கொண்டு, தேசிய தனிநபர் பெயர் பட்டியலை ஆரம்பிக்க முடியும்.

### 3.3 இரண்டாம் படிமுறை - தகவல் தொழிநுட்ப அடிப்படை வசதியினை ஏற்படுத்தல்.

#### 3.3.1 இடைக்கால தீர்வு மென்பொருளினை தர மேம்படுத்தல்

பொருத்தமான வழங்குனர் மூலமாக இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயன்முறைக்காக இடைக்கால தீர்விற்கான மென்பொருள், உயிரியல் பண்புத் தரவு, கைவிரல் அடையாளம், குடும்ப தகவல்கள் மற்றும் ICAO தரத்திலான புகைப்படத்தினை உள்ளடக்கி புதுப்பித்தல்.

#### 3.3.2 பிரதான தரவு களஞ்சியம் மற்றும் இடர் மீளமைப்பு தரவு மையம் ஆகியவற்றை ஸ்தாபித்தல்

பொருத்தமான வழங்குனர் ஒருவர் ஊடாக சர்வர்ஸ் (Servers), UPS மற்றும் தேவையான ஏனைய மேலதிக பாகங்களுடன் கூடிய தரவு மையங்கள் இரண்டினையும் ஸ்தாபித்தல்.

#### 3.3.3 இரு தரவு மையங்களுக்குமான தொடர்பாடல் இணைப்பினை ஏற்படுத்தல்.

#### 3.3.4 இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை இயக்க அலகினை தேவையான அலுவலக உபகரணங்கள் மற்றும் வலையமைப்புடன் ஸ்தாபித்தல், பொருத்தமான வழங்குனர் ஊடாக நிறைவேற்றிக்கொள்ளல்.

### 3.4 மூன்றாம் படிமுறை

தேசிய தனிநபர் பெயர் பட்டியலினை அடிப்படையாக் கொண்டு நவீன குறியீட்டுடன் கூடிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகித்தல் மற்றும் தகவல் பரிமாற்றம் செய்தல் முறைமையொன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

## 4. மதிப்பீடு

முன்மொழியப்பட்டுள்ள படிமுறைகளுக்கமைய ரூ. 14500 மில்லியன் செயற்திட்ட மதிப்பீட்டினை ரூ. 8000.7 மில்லியன் வரை குறைக்கக் கூடியதாக உள்ளது.

- எதிர்கால செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு தேவையான செலவு மதிப்பீடு ரூ. மில்லியன் 7273.77
- இதுவரையான செலவு ரூ. மில்லியன் 726.94

இணைப்பு ; எதிர்கால செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான செலவு மதிப்பீடு

| தொ இல. | விபரங்கள் | நிதி (ரூ. மில்லியன்) | மொத்தம் |
|---|---|---|---|
| | **முதல் படிமுறை** | | |
| 1 | நடைமுறையிலுள்ள அடையாள அட்டைக்கு பதிலாக அச்சிடப்பட்ட தகவல்கள் மற்றும் ICAO தரத்திலான புகைப்படத்துடனான அடையாள அட்டை விநியோகித்தல் | 374.00 | |
| 2 | 331 பிரதேச செயலகங்களிலும் அமைந்துள்ள திணைக்கள கிளையினை தகவல்களை இலத்திரனியலூடாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான உபகரணங்களுடன் ஸ்தாபித்தல். | 397.02 | |
| 3 | பௌதீக அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் | | |
| 3.1 | 13 பிரதேச செயலகங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள திணைக்கள கிளையில் நிரந்தர கிளையினை அமைத்தல் | 26.00 | |
| 3.2 | திணைக்கள பிரதேச காரியாலயங்களுக்கான தொடர்பாடல் இணைப்பினை ஏற்படுத்தல் | 19.93 | |
| 3.3 | இடர் மீளமைப்பு மையத்தின் கட்டிடத்தினை நிர்மாணித்தல் | 106.59 | |
| 3.4 | பிரதான தரவு களஞ்சியம், e-NIC இயக்கக் கிளை, செயற்திட்ட முகாமைத்துவ கிளை, மற்றும் திணைக்களம் ஆகியவற்றை புதிய கட்டிடத்தில் அமைத்தல் | 145.31 | |
| 4 | 15 வயதிற்கு மேற்பட்ட சகல பிரஜைகளினதும் தரவுகளை சேகரித்தல் | 533.06 | |
| 5 | தரவு இலத்திரனியல்படுத்தல் | 715.80 | |
| | மொத்தம் | | **2317.17** |
| | **இரண்டாம் படிமுறை** | | |
| 6 | இடைக்கால தீர்வு மென்பொருளினை இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயன்முறையின் தேவைக்கேற்ப மேம்படுத்தல் | 600.00 | |
| 7 | பிரதான தரவு களஞ்சியம், இடர் மீளமைப்பு தரவு களஞ்சியம் என்பவற்றை ஸ்தாபித்தல் | 762.00 | |
| 8 | e.NIC இயக்க கிளையினை ஆரம்பித்தல் | 145.17 | |
| | மொத்தம் | | **1507.17** |
| | **மூன்றாம் படிமுறை** | | |
| 9 | மேலதிக அட்டை அச்சு இயந்திரம் | 126.4 | |
| 10 | தேசிய தனிநபர் பெயர் பட்டியல் ஸ்தாபித்தல் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகித்தல் | 2275.14 | |
| 11 | தகவல் பரிமாற்ற முறைமையொன்றை அமைத்தல் | 5.00 | |
| | மொத்தம் | | **2406.54** |
| | **மூன்று படிமுறைகளுக்குமான பொதுவான செலவு** | | |
| 12 | தொழிநுட்ப ஆலோசனை சேவை | | 35.30 |
| 13 | தரவு மையம், பிரதேச பிரிவு, பிரதான காரியாலய இயக்க கிளை என்பவற்றிற்கான பராமரிப்பு செலவு | | 640.41 |
| 14 | செயற்திட்ட முகாமைத்துவம் | | 177.59 |
| 15 | இடைப்பட்ட செலவு | | 189.59 |
| | **மொத்தம்** | | **7273.77** |

5. **செயற்திட்ட முன்னேற்றம் 2015.01.01 முதல் 2015.12.31 வரை**

| செயற்பாடுகள் | செலவு மதிப்பீடு (ரூ. மில்லியன்) | முன்னேற்றம் (ரூ. மில்லியன்) | | % |
|---|---|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு. | 41.5 | நிதி | 14.1 | 34.2% |
| செயற்திட்டத்திற்காக தொழிநுட்ப ஆலோசனை சேவை பெற்றுக்கொள்ளல் | 3.0 | நிதி | - | |
| | | பௌதீக | • 2015.10.07 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலிஜிஸ் நிறுவனம் மூலமாகபெற்றுக்கொள்ளப்பட்ட சேவையை நிறுத்தியது.<br>• தொழிநுட்ப ஆலோசனை சேவையினை நேரடியாக கொழும்பு மற்றும் மொறட்டுவை பல்கலைக் கழகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| தரவு சேகரிக்கும் நடவடிக்கைக்காக ஆட்பதிவுத் திணைக்கள கிளைக் காரியாலயங்களை இயக்க மத்திய நிலையமாக நிருவுதல் மற்றும் தேவையான காரியாலய உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் | 24.5 | நிதி | 4.7 | 19.5% |
| | | பௌதீக | • தரவு சேகரிப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள 331ஆ.ப.தி. பிரதேச காரியாலயங்களில் 174 காரியாலயங்களை நவீனமயப்படுத்தல்.<br>• தற்காலிக இடங்களில் இயங்கிய 09 ஆ.ப.தி பிரதேச காரியாலங்களுக்கு நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. | |
| இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்குரிய ஆட்பதிவு சட்டமூலத்தினை திருத்தியமைத்தல். | | நிதி | - | |
| | | பௌதீக | • திருத்த த்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2015.04.01 ஆம் திகதி கிடைக்கப்பெற்றதோடு 2015.04.11 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.<br>• திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் 2015.07.07 திகதி நடைபெற தீர்மானிக்கப்பட்டிருந்தும் 2015.06.26 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதனால் பாராளுமன்ற அனுமதியை பெற முடியாமற் சென்றது. அதனால் மீண்டும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. | |

| செயற்பாடுகள் | செலவு மதிப்பீடு (ரூ. மில்லியன்) | முன்னேற்றம் (ரூ. மில்லியன்) | | % |
|---|---|---|---|---|
| இடர் மீளமைப்பு மத்திய நிலையம் நிர்மாணித்தல்<br>( Disaster Recovery Data Center) | 43.5 | நிதி | 0.028 | .07% |
| | | பௌதீக | • மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சின் கீழ் ஆட்பதிவு திணைக்களம் இருந்த போது அவ்வமைச்சு செயலாளரின் ஆலோசனையின் பேரில் ஹம்பாந்தோட்டை சூரியவெவ தொழிநுட்ப பூங்காவில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட இடர் மீளமைப்பு தரவு மையம் (DRC ) நிர்மாணித்தல் நிறுத்தப்பட்டது<br>• இவ் இடர் மீளமைப்பு மையம் (DRC ) திணைக்களத்திற்கு சொந்தமான நுவரெலியாவில் அமைந்துள்ள நிலப் பகுதியில் அமைப்பதற்கான அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| ஆட்பதிவு சட்டமூலத்தினை திருத்தம் செய்தல் மற்றும் தேவையான விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அனுமதியை பெற்றுக்கொள்ளல். | | பௌதீக | • தேசிய பிரஜைகள் தரவு தளமொன்றினை உருவாக்குதல் மற்றும் இ.தே.அ..அ. விநியோகிப்பதற்குரிய ஆட்பதிவு சட்டமூலத்தின் திருத்தம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சரவை உப குழுவின் சிபார்சுடன் சட்ட வரைபு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதி சட்ட வரைபு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>• உரிய விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு சட்ட வரைபுகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| நடைமுறையிலுள்ள அடையாள அட்டைக்கு பதிலாக புதிய மாதிரியிலான பிளாஸ்டிக் அட்டை விநியோகிப்பதற்காக சட்டரீதியான ஒதுக்கீடுகளை தயாரித்தல். | | நிதி | - | |
| | | பௌதீக | • இதற்கான விதிமுறைகளை தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்று வர்த்தமானியில் பிரசுரித்ததன் பின்னர் பாராளுமன்ற சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

| செயற்பாடுகள் | செலவு மதிப்பீடு (ரூ. மில்லியன்) | முன்னேற்றம் (ரூ. மில்லியன்) | | % |
|---|---|---|---|---|
| ICAO தரத்திலான புகைப்படங்களைப் பெற்றுக்கொள்வதற்காக புகைப்பட கலைஞர்களை பதிவு செய்தல். | 0.25 | நிதி | - | |
| | | பௌதீக | • முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்காத புகைப்பட கலைஞர்களுக்காக சந்தர்ப்பத்தினை பெற்றுக்கொடுப்பதற்காக 205.11.26 திகதி மீண்டும் பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டது. அதற்கமைய இதுவரை 1900 வரையில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. | |
| சகல பிரதேச மற்றும் மாகாண காரியாலயங்களிலிருந்து பிரதான காரியாலயத்திற்கு தகவல்கள் இலத்திரனியலூடாக பெற்றுக்கொள்வதற்காக VPN இணைப்பு பெற்றுக்கொடுத்தல். | 5.0 | நிதி | 0.048 | .98% |
| | | பௌதீக | கேள்விப்பத்திரம் கோரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | |
| சகல பிரதேச மற்றும் மாகாண காரியாலயங்களிலிருந்து விண்ணப்பங்களின் தகவல்களை இலத்திரனியலூடாக பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களை அமைத்தல். (கணனி, அச்சு இயந்திரம் மற்றும் ஸ்கேன் இயந்திரம்) | 297.0 | நிதி | - | |
| | | பௌதீக | • கேள்விப்பத்திரம் கோரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | |
| இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கு ஏற்ப இடைக்கால தீர்வு மென்பொருளினை தர மேம்படுத்தல் | | நிதி | - | |
| | | பௌதீக | • விலைமனு கோருவதற்கான கேள்விப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | |

| செயற்பாடுகள் | செலவு மதிப்பீடு (ரூ. மில்லியன்) | முன்னேற்றம் (ரூ. மில்லியன்) | | % |
|---|---|---|---|---|
| இலத்திரனியல் தேசிய இயக்க கிளை பத்தரமுல்லை தனிநபர் அடையாளம் தொடர்பான செயலாளர் காரியாலய கட்டிடத்தில் அமைத்தல் | 112.0 | நிதி | - | |
| | | பௌதீக | • பகுதிபிரித்தல், வலையமைப்பு மற்றும் மின்சாரம் வழங்கல் என்பவற்றுக்கான விலைமனு கோரல். | |
| தரவு சேகரிப்பு முற்றுப்பெற்றவுடன் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் | | நிதி | - | |
| | | பௌதீக | • தென் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 27 பிரதேச செயலகங்களில் முன்னோட்ட செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தப்பட்டதோடு 1 லட்சம் அளவில் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. | |
| திணைக்கள அலுவர்களை அறிவூட்டல் | 1.4 | நித | 0.067 | 4.8% |
| | | பௌதீக | திருத்தப்பட்ட செயற்திட்ட திட்டங்ளுக்கு ஏற்ப திணைக்கள பணிகள் தொடர்பாக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் கிளைத் தலைவர்களை அறிவூட்டல் | |

**கடந்த வருடத்தில் செயற்திட்ட முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்திய பிரச்சினைகள்**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பிரச்சினைகள் 2015 ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்ட கருமங்களில் முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்வதற்கு தாக்கம் செலுத்தப்பட்டுள்ளன.

1. 2011.08.11ம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னோலிஜிஸ் நிறுவனம் செயற்திட்ட முகாமையாளராக செயற்பட்டதெனினும், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிப்பதற்கான 1968 ஆம் ஆண்டு 32 இலக்க ஆட்களை பதிவு செய்யும் சட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தம் மற்றும் ஒழுங்குவிதிகள் பாராளுமன்ற அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அவ்விடயத்தினை செயற்திட்டத்தினால் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணமாக அதற்கான பாராளுமன்ற அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை தாமதமடைந்துள்ளது.

2. 3 வருட செயற்திட்ட கால எல்லை 2015 ஜூலை மாதத்துடன் முடிவடைந்தும், செயற்றிட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக திருத்தப்பட்ட செயற்திட்டம் மற்றும் செயற்திட்ட கால எல்லையை அதிகரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2015.10.07 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

3. இடர் மீளமைப்பு தரவு மையத்தினை அமைத்தல், சூரியவெவ தொழிநுட்ப பூங்கா அமைப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்டும், தேவையான அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் இது தொடர்பாக மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம், இடர் மீளமைப்பு தரவு மையத்தினை நுவரெலியாவில் அமைந்துள்ள திணைக்கள காணியில் தாபிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதற்காக அமைச்சரவை அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை பத்திரம் 2015.10.13 ஆம் திகதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. 15 மில்லியனுக்கு மேற்பட்ட இலங்கை பிரஜைகளின் தகவல்கள், உயிரியல் பண்புத் தரவுகள் என்பவற்றை இலத்திரனியல் படுத்துவதற்காக (Data Digitizing) வழங்குனரை தெரிவு செய்வதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு தயாராக உள்ளது. ஆட்களை பதிவு செய்யும் சட்டத்திற்குரிய திருத்தத்திற்காக பாராளுமன்ற அனுமதியினை பெற்றுக்கொள்ளும் வரை இவ் விலைமனுகோரலினை செயற்படுத்தல் தாமதமடைந்துள்ளதோடு, அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக தரவு சேகரிப்பதற்கு மற்றும் இலத்திரனியல் படுத்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் தயார் செய்யப்பட்டுள்ளன.

5. 2015 வருடத்தினுள் திணைக்களம் 04 அமைச்சுகளுக்கு மாற்றப்பட்டதன் காரணமாக திட்டமிட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் சென்றது.

## பயிற்சி நிகழ்ச்சித்திட்ட அறிக்கை (2015.01.01 இருந்து 2015.12.31 வரை)

| | பயிற்சிப் பாடநெறி | செலவு (ரூ.) | அறிக்கை (பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணி) |
|---|---|---|---|
| 1. | அரச நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பாடநெறி | 205,500.00 | 2 |
| 2. | தமிழ் மொழி பயிற்சிப் பாடநெறி | 630,300.00 | 91 |
| 3. | அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு தொடர்பான பயிற்சி பாடநெறி | 8,500.00 | 1 |
| 4. | தலைமைத்துவம் மற்றும் குழு கட்டியெழுப்பல் தொடர்பான பயிற்சி | 5,000.00 | 2 |
| 5. | செயலாண்மை திறன் மேம்பாடு தொடர்பான பயிற்சி நெறி | 12,000.00 | 1 |
| 6. | சிங்கள மொழி பயிற்சிப் பாடநெறி | 4,000.00 | 4 |
| 7. | திணைக்கள கணனி தள பராமரிப்பு மற்றும் விருத்திசெய்தலுக்காக வழங்குனரை தெரிவுசெய்வதற்கான விவர வரையறை தயாரித்தல் தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 11,073.00 | 5 |
| 8. | புதிய உதவி ஆணையாளர்களுக்கான ஆரம்ப பயிற்சி பட்டறை | 3,080.00 | 6 |
| 9. | சேவையூக்க பயிற்சிநெறி | 280,505.00 | 320 |
| 10. | மனித வள முகாமைத்துவம் | - | 9 |
| 11. | உற்பத்தி திறன் மற்றும் தரமேம்பாட்டுக்கான நேரிய எண்ணத்தினை மேம்படுத்தல் | - | 4 |
| 12. | தொழில்முறை கடிதம் அமைத்தல் | - | 8 |
| 13. | வள பாவனை மற்றும் பாதுகாப்பான வலையமைப்பு | - | 2 |
| 14. | சமநோக்கு | - | 2 |
| 15. | சம்பள மீளமைப்பு | - | 8 |
| 16. | அலுவலக உதவியாளர் களின் சேவை மேம்பாடு | - | 1 |
| 17. | இடர் முகாமைத்துவம் | - | 4 |
| 18. | அரச கணக்காய்வு நடவடிக்கை | - | 17 |
| 19. | வாடிக்கையாளர் பராமரிப்பு மற்றும் மக்கள் தொடர்பாடல் | - | 5 |
| 20. | திறைசேரி நிதி ஒதுக்கீட்டு முகாமைத்துவம் | - | 5 |
| 21. | அரச நிதி பிரமாணம் | - | 61 |
| 22. | அரச கொள்முதல் செயன்முறை | - | 3 |
| 23. | அலுவலக முகாமைத்துவ மற்றும் திறன் விருத்தி | - | 15 |
| 24. | சூழல் முகாமைத்துவம் | - | 1 |
| 25. | தொடர்பாடல் மற்றும் சமர்ப்பித்தல் திறன் | - | 4 |
| 26. | அரச சேவை திறன் விருத்தி | - | 2 |
| 27. | அரச நிதி முகாமைத்துவம் | - | 32 |
| 28. | அரச உத்தியோகத்தர்கள் அறிந்து கொள்ள வேண்டிய சட்டங்கள் | - | 34 |
| 29. | அரச கொடுப்பனவு முறைகள் | - | 18 |
| 30. | செயற்திட்ட முகாமைத்துவம் | - | 9 |
| 31. | களஞ்சிய முகாமைத்துவம் | - | 5 |
| 32. | ஓய்வூதிய நடவடிக்கைகள் | - | 4 |
| 33. | தாபனக்கோவை ஒழுங்கு விதிகளும் நடைமுறை விதிகளும் | - | 23 |
| 34. | ஒழுக்காற்று நடவடிக்கைகள் | - | 15 |
| 35. | இ - அரச பிரயோகமும் பாதுகாப்பும் | - | 4 |
| 36. | தொழில்வாண்மை மற்றும் வாழ்க்கை இரண்டையும் சமநிலையில் பேணுவதற்கான | - | 20 |
| | **மொத்தம்** | **1,160,958.00** | **747** |
| | உற்பத்தி உதவியாளர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்தல் | 33,282.50 | 13 |
| | **மொத்தம்** | **1,194,240.50** | **760** |

**2015 ம் ஆண்டில் அடையாள அட்டை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்ட முன்னேற்ற அறிக்கை**

| இல | செயற்பாடு | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் / கடிதங்கள் | செயற்பாட்டில் உள்ள விண்ணப்பங்கள்/ கடிதங்கள் | நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் /கடிதங்கள் |
|---|---|---|---|---|
| 01 | சிக்கலான விண்ணப்பங்கள்<br>i. ஒரு அடையாள அட்டை இலக்கம் இருவருக்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருத்தல்.<br>ii. முதற் தடவையாக விண்ணப்பிக்கையில் இரு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.<br>iii. திருத்தம் செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கையில் அதனுடன் விகாரப்படுத்திய அடையாள அட்டையினை இணைத்தல் மற்றும் வேறு நபரின் அடையாள அட்டையினை இணைத்தல்.<br>iv. இரண்டு அடையாள அட்டை இலக்கங்களை வைத்திருத்தல்.<br>v. பிரதேச செயலாளரின் மேலொப்பம் சந்தேகத்திற்கிடமான விண்ணப்பங்கள்.<br>vi. விண்ணப்ப படிவங்ளுடன் சமர்ப்பிக்கப்படும் சந்தேகத்திற்கிடமான பிறப்புச் சான்றிதழ்களை பரீட்சிப்பதற்காக பதிவாளர் காரியாலயங்களுக்கு அனுப்புதல்.<br>vii. பழைய இலக்கங்கள் ஆவணப்படுத்தப்படுத்தப்பட்ட புத்தகங்களில் காணப்படும் குறைபாடு.<br>a) ஒரு அடையாள அட்டை இலக்கம் இரு இடங்களில் பதியப்பட்டிருத்தல்.<br>b) தவறான அடையாள அட்டை இலக்கம் பதியப்பட்டிருத்தல்.<br>c) அலுவலர்களினால் அடையாள அட்டை இலக்கங்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படாமையினால் ஏற்படும் தவறுகள்.<br>viii. போலி பிறப்புச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதனால் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை. | 7319 | 4010 | 3309 |
| 02 | i. பிறநாடுகளிலுள்ள அல்லது பிறநாடுகளுக்கு செல்லவுள்ள நபர்களுக்கு தேவையான பொலிஸ் விடுகைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் இலக்கத்தினை உறுதிப்படுத்தல். | 14858 | 260 | 14598 |
| | ii. அடையாள அட்டை இலக்கங்ளை உறுதிப்படுத்தும் கடிதங்கள். | 192 | - | 192 |

| இல | செயற்பாடு | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் / கடிதங்கள் | செயற்பாட்டில் உள்ள விண்ணப்பங்கள்/ கடிதங்கள் | நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் /கடிதங்கள் |
|---|---|---|---|---|
| 03 | அடையாள அட்டை இலக்கத்தினை உறுதிப்படுத்தல்<br>i. விண்ணப்பதாரரின் வேண்டுகோளுக்கிணங்க அடையாள அட்டை இலக்கத்தினை உறுதிப்படுத்தல்.<br>ii. பாதுகாப்பு பிரிவிற்காக ( பொலிஸ், ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவு , குற்றவியல் திணைக்களங்களுக்கு)<br>iii. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக ( அரச , தனியார் வங்கிகள், தொழிலாளர் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதியம் , குடி வரவு , குடியகல்வு திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், தேர்தல்கள் திணைக்களம்)<br>iv. வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் தொடர்பில்<br>a. IOM,தூதுவராலயம்,ஆணையாளர் அலுவலகம்.<br>v. நீதி மன்ற நடவடிக்கைகளுக்காக அடையாள அட்டை இலக்கங்களை பரிசீலித்தல்.<br>. | 11974<br>1794<br>1873<br>34<br>153 | 1170<br>103<br>184<br>2<br>13 | 10804<br>1691<br>1689<br>32<br>140 |
| 04 | போலி ஆவணங்களை இணைத்து அடையாள அட்டைகளை தயாரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான ஒழுங்குமுறையான பரிசோதனை மேற்கொள்ள குற்றவியல் பரிசோதணை திணைக்களத்திற்கு முன்னிலைப்படுத்தியமை. | 15 | 15 | |

**இணைப்பு III**

**பணியாற்றொகுதி விபரம் 2015.12.31 வரை**

**பணியாளர் எண்ணிக்கை பற்றிய விபர அறிக்கை (பணியாற்றொகுதி)**

| பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | பற்றாக்குறை எண்ணிக்கை | மேலதிகம் |
|---|---|---|---|---|
| ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - | - |
| பிரதி ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - | - |
| ஆணையாளர் | 3 | 3 | - | - |
| பிரதான கணக்காளர் | 1 | 1 | - | - |
| பிரதி/உதவி ஆணையாளர் | 16 | 16 | - | - |
| பிரதி/உதவி பணிப்பாளர் | 1 | - | 1 | - |
| கணக்காளர் | 1 | 1 | - | - |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 2 | 2 | - | - |
| மொழி பெயர்ப்பாளர் | 2 | - | 2 | - |
| வரவு செலவு உதவியாளர் (தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் நியமிக்கப்படல் தொடர்பாக ) | 1 | 1 | - | - |
| அமுலாக்கல் உத்தியோகத்தர் | 75 | 67 | 8 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 827 | 777 | 50 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 282 | 174 | 108 | - |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | 10 | 8 | 2 | - |
| சாரதி | 11 | 8 | 3 | - |
| அலுவலகப் பணியாளர் | 85 | 73 | 12 | - |
| உற்பத்தி உதவியாளர் * | 36 | 36 | - | - |
| ஆவண உதவியாளர் * | 10 | 10 | - | - |
| மொத்தம் | **1366** | **1180** | **186** | **-** |

* இப்பதவிகள் வகிப்பவருக்கு தனிநபர் என்ற வகையில் அனுமதிக்கப்படுவதுடன் இப்பதவிகள் இல்லாது போகுமிடத்து ஏற்படும் வெற்றிடம் தொடர்பாக அலுவலகப் பணியாளர் எண்ணிக்கை 131 ஆக வேண்டும்..